# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 59/2017 |
| Police station | : | |
| Deposition of witness for Prosecution | : | LW 1 / PW 1 |
| Name | : | செல்வக்குமார் |
| Father Name/Husband Name | : | கோபால்சாமி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.04.2022.

**மு.வி.** நான் தற்போது காராமணிக்குப்பம் சீத்தாராமன் நகரில் வசித்து வருகிறேன். கடந்த 10.03.2015 ந் தேதி இரவு 8.10 மணியளவில் நானும் எனது மனைவி என் தம்பி மகள் அர்ச்சுனா ஆகியோர் வீட்டில் டிவி பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது இரண்டு நபர்கள் வீட்டின் உள்ளே நுழைந்தார்கள். என் மனைவி எட்டிபார்த்தார். உடனே என் மனைவி கழுத்தில் இருந்து சுமார் 8 1/2 பவுன் தாலி சரடை ( செயின் 5 பவுன், தாலி 1/2 பவுன், 8 நாணல்கள் 4 கிராம், 2 கிராம் வாழப்பூ சீப்பு, 2 கிராம் மகாலட்சுமி) ஆகியவற்றை இரண்டு நபர்கள் அறுத்து கொண்டு சென்றுவிட்டார்கள். நான் அவர்களை பார்த்தேன். ஆஜர் எதிரிகள் தான் அந்த நபர்கள் ஆவார்கள். நான் வெளியே வந்து சத்தம்போட்டேன் அதற்குள் அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர். அதன்பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அசாஆ.1 ஆகும். அதன்பிறகு சுமார் 1 1/2 அல்லது 1 3/4 வருடம் கழித்து காவல் நிலையத்தில் இருந்து அழைத்து ஆஜர் எதிரிகளை இவர்கள் தானா என்று அடையாளம் காட்டினார்கள். திருடு போன எனது மனைவி நகையில் சுமார் 6 பவுன் மட்டும் நான் நீதிமன்றத்தில் இருந்து மனு

செய்து பெற்று சென்றேன். தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். நான் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ள நகை தான் மேற்படி திருடு போன நகையாகும். மேற்படி தாலி சரடு சா. பொ. 1 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1988 ம் வருடம் திருமணம் நடைபெற்றது. எங்கள் குல வழக்கப்படி மாப்பிள்ளை வீட்டில் தான் தாலி வாங்குவோம் என்றால் சரிதான். எனது வீடு எங்குள்ளது என்றால் சீத்தாராமன் நகரில் உள்ளது. எனது வீட்டு வாசல் கிழக்கு பார்த்த வாசலாகும். எனது வீடுள்ள தெரு தெற்கு வடக்கு தெருவாகும். தொலைந்து போனதாக செல்லப்படும் தாலி எனது திருமணத்தின்போது வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாலி மட்டும் குறிஞ்சிப்பாடி வள்ளி விலாஸில் வாங்கப்பட்டது. தாலி சரடு 1999 ம்வருடம் பண்ருட்டி வள்ளி விலாஸில் வாங்கப்பட்டது. மேற்படி தாலி மற்றும் தாலி சரடில் மேற்படி நகை கடைகளின் சீல் உள்ளது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் நகைகளை பெற்று செல்லும்போது மேற்படி சீல்களை சரிபார்த்துதான் பெற்று சென்றேன் என்றால் சரிதான். நகைகள் கண்டுபிடிக்கப்பட்டதற்கு முன்பாக போலிசாரிடம்இருந்து நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்று அறிவிப்பு ஏதும் வந்ததா என்றால் வந்தது. அதன்பிறகு ஆஜர் எதிரிகளை அழைத்து கொண்டு போலிசார் என் வீட்டிற்கு வந்தார்களா என்றால் ஆஜர் எதிரிகளை அழைத்து கொண்டு உதவி ஆய்வாளர் மற்றும் போலிசார் எனது வீட்டிற்கு வந்து எதிரிகளை காட்டி இவர்கள்தானா என்று கேட்டார்கள். நாங்கள் ஆஜர் எதிரிகள் தான் என்று அடையாளம் காட்டினோம். அதன்பிறகு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. நான் வீட்டிற்குள் தெற்கு பக்கமாக அமர்ந்து டிவி பார்த்து கொண்டிருந்தேன். என் மனைவி எங்கிருந்தார் என்றால் நான் சேரில் உட்கார்ந்திருந்தேன். எனது மனைவி 5 அடி தள்ளி தரையில் உட்கார்ந்திருந்தார். நான் என் மனைவியை பார்க்க வேண்டும் என்றால் திரும்பிதான் பார்த்திருக்க முடியும் என்றால் சரியல்ல. என் மனைவி எனக்கு முன்னால்தான் உட்கார்ந்திருந்தார். நான் பார்க்கும்போது இரண்டு நபர்கள் கருப்பாக இருந்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் 1வது எதிரி சிவப்பு நிறத்தவர் என்றால் சரியல்ல அவர் கருப்பாகதான் உள்ளார். இரண்டு நபர்கள் வந்து செயினை பறித்துகொண்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது எவ்வளவு நேரம் என்றால் சுமார் 2

அல்லது 3 நிமிடங்கள் இருக்கும். நான் சொல்வதுபோல போலிசார் ஆஜர் எதிரிகளை எனது வீட்டிற்கு அழைத்து வரவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது உண்மை. நான் போலிசார் சொல்லிக்கொடுத்தற்குகிணங்க ஆஜர் எதிரிகள் தான் திருடி சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் வந்து தாலியை பறித்து சென்றதாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல உண்மைதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 59/2017 |
| Police station | : | |
| Deposition of witness for Prosecution | : | LW 2 / PW 2 |
| Name | : | சாந்தி |
| Father Name/Husband Name | : | செல்வக்குமார் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.04.2022.

**மு.வி.** நான் தற்போது காராமணிக்குப்பம் சீத்தாராமன் நகரில் வசித்து வருகிறேன். அசா 1 எனது கணவர் ஆவார். கடந்த 10.03.2015 ம் தேதி இரவு சுமார் 8.00 அல்லது 8.10 மணியளவில் நானும் எனது கணவர் அசா.1 மற்றும் எனது கொழுந்தனார் மகள் அர்ச்சுனா ஆகியோர் என் வீட்டின் உள்ளே டிவி பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது என் தெரு வாசப்படி அருகே யாரோ வருவது போல நிழல் தெரிந்தது. நான் யார் என்று பார்த்தபோது என் கழுத்தில் இருந்து தாலி சரடை ஒரு நபர் பிடித்து அறுத்தார். நான் கத்தியபோது அருகில் இருந்த இன்னொரு நபர் என்னை கீழே பிடித்து தள்ளிவிட்டார். என் கழுத்தில் இருந்து அறுக்கப்பட்ட தாலி செயின், அதனுடன் இனைந்த பொட்டு, தாலி, வாழ சீப்பு, மகாலட்சுமி பொட்டு, நாணல் ஆகியவை சுமார் 8 அல்லது 8 1/2 பவுன் இருக்கும். என் கணவர் எழுந்துவந்து அவரும் கத்தினார். வீட்டின் வெளியே மக்கள் கூடி அங்கும் இங்கும் சுமார் 1/2 மணிநேரம் தேடினார்கள். செயின் அறுத்தவர்கள் ஓடிவிட்டார்கள். அதன்பிறகு நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என் கழுத்தில் இருந்து செயினை அறுத்தவர்களை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரிகள் தான் அந்த நபர்கள் ஆவார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். அதன்பிறகு

சுமார் 1 1/2 வருடம் கழித்து ஒரு நாள் போலிசார் ஆஜர் எதிரிகளை அழைத்து வந்து இவர்கள்தானா என்று கேட்டார்கள். நான் அவர்களை அடையாளம் காட்டினேன். அதன்பிறகு நீதிமன்றத்தின் மூலம் மனு செய்து சுமார் 6 பவுன் தாலி சரடை நாங்கள் பெற்றுச்சென்றோம். 6 பவுன்கள் மட்டும் தான் கிடைத்தது என்று போலிசார் கூறினார்கள். தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் தாலி சரடுதான் மேற்படி தாலி சரடாகும் ( ஏற்கனவே அசா 1 ன் மூலம் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எனது வீட்டில் எனது கணவருக்கு எந்த பக்கம் அமர்ந்து டிவி பார்த்தேன் என்றால் எனது கணவருக்கு முன்னால் அவருக்கு பக்கத்தில் அமர்ந்து டிவி பார்த்து கொண்டிருந்தேன். நாங்கள் டிவி பார்த்து கொண்டிருந்தபோது நிழல் தெரிந்தது என்றால் சரிதான். நான் யார் என்று வெளியில் வந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் வெளியே வந்து பார்த்தபோது தான் தாலி சரடை பறித்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் எனது வீட்டுகாரருக்கு தகவல் கூறினேனா என்றால் எனது வீட்டுகாரர் நான் கீழே விழுவதை பார்த்துவிட்டு அவரும் ஓடிவந்து ஐயோ என்று கத்தினார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் புகார் கொடுத்தவுடன் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையில் வாசல் படி அருகில் யாரோ வருவது போல் நிழல் தெரிந்தது என்றும் நான் சென்று பார்த்தபோது ஒரு நபர் தாலி சரடை பிடித்து அறுத்தார் என்றும் அருகில் இருந்த நபர் என்னை கீழே பிடித்து தள்ளிவிட்டார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதலில் பொருட்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்று தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு எப்போது போலிசார் நகைகளை கண்டுபிடித்தார்கள் என்றால் சுமார் 1 1/2 வருடம் கழித்து ஆஜர் எதிரிகளை மதிய நேரத்தில் வீட்டிற்கு அழைத்துவந்து அடையாளம் காட்ட சொன்னார்கள் நாங்கள் அடையாளம் காட்டினோம். திருடு போன எனது நகையை நீதிமன்றம் மூலமாக பெற்று சென்றோம் என்றால் சரிதான். தாலி சரடை பண்ருட்டி வள்ளி விலாஸில் வாங்கியது, தாலியை குறிஞ்சிப்பாடி வள்ளி விலாஸில் வாங்கினோம். மேற்படி நகைகளில் மேற்படி கடைகளில் சீல் உள்ளதா என்றால் தற்போது சீல் அழிந்துவிட்டது. நான் நீதிமன்றத்தில் பெற்று சென்ற நகை என்னுடைய நகையில்லை என்றாலும் எதாவது ஒரு நகை கிடைத்தால் போதும் என்று போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பெற்று சென்றேன் என்றாலும் சரியல்ல. அது என்னுடைய நகைதான். உண்மையில் மேற்படி கடைகளில் நாங்கள் நகை வாங்கியிருந்தால்

நகைகளில் மேற்படி கடைகளின் சீல் இருந்திருக்கும் என்றாலும் அவ்வாறு வாங்க வில்லை என்பதால்தான் சீல் இல்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் மேற்படி கடைகளில் தான் நகைகளை வாங்கினோம். என்னுடைய தாலி சரடு அறுத்த செல்லப்பட்ட நேரம் இரவு நேரம் இருட்டு நேரம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் தான் தாலி சரடை அறுத்து சென்றார்கள் என்று போலிசார் சொல்லி கொடுத்துதான் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல ஆஜர் எதிரிகளை போலிசார் எங்கள் வீட்டிற்கு அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல அழைத்து வந்தார்கள்.